1984 மார்ச் 8]

(அ) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் புக்கத்துறை கிராமத்தில் கால்நடை மருத்துமனைக் கட்டிடம் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அக் கட்டிடம் விரைவில் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் புக்கத்துறை கிராம மருத்துவமனைக்கு லிண்டல் (lintel) வரை செங்கற் கட்டிடம் கட்டப்பட்டு, சிமெண்ட் இல்லாத காரணத்தால் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. விரைவில் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-10)

2. தகவல் கோரல்.

மழை, வெள்ளத்தினால் தென் மாவட்டங்கள் பாதிக்கப் பெற்றுள்ளமை.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து கடுமையான மழை பெய்துகொண்டிருப்பதன் காரணமாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் வத்திராயிருப்புக்கு அருகே உள்ள கிராமங்கள் நீரிலே மூழ்கி அங்குள்ள மக்கள் மரங்களின் மீது ஏறி நின்றுகொண்டு உயிரைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இதே மாதிரியாக பல மாவட்டங்களில் போக்குவரத்து கூட துண்டிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். நேற்று கூட இது குறித்து கவன ஈர்ப்பு வந்தபோது, ஒவ்வொரு கேள்வியை கேட்க விட்டீர்கள்.

அங்குள்ள மக்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்கு என்ன செய்வது என்று தெரியாமல், மிக பயங்கரமான நிலைமையில் இருக்கிறார்கள். தவித்துக் கொண்டிருக்கிறார்கள் தொடர்ந்து அங்கே மழை பெய்து கொண்டிருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எல்லாக் கட்சி

யைச் சேர்ந்தவர்களும் கொடுத்திருக்கிறோம். அதை அவையில் எடுத்துக்கொண்டு விவாதித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களோ அல்லது அவை முன்னவர் அவர்களோ பதில் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களுடைய உணர்வுகள் மதிக்கப்படுகின்றன. காலையிலேயே இது குறித்து என்னுடைய அறையில் நிறைய தகவல்கள் வந்தன. ஆகவே, நான் 1 மணி 1.30 மணிக்குள்ளாக, இந்த அவையின் முன்னதாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை இது குறித்து அறிக்கை ஒன்றை வைக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களும் வைப்பதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்போது பேசலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்படுவதைப் போல, அரசும் கவலைப் படுகின்ற அளவுக்கு திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் பெரும்மழை பெய்து, பெரு வெள்ளங்கள் ஏற்பட்டு, போக்குவரத்தே துண்டிக்கப் படுகின்ற நிலைமை இருப்பதாக நமக்குத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

தலைமைச் செயலாளர் அவர்களின் மூலமாக ஆங்காங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல் துறை அதிகாரிகளும், ரிசர்வ் படையில் சேர்ந்திருக்கிறவர்களும், தொடர்பு கொள்ளப்பட்டு, உடனடியாக நிவாரண வேலைகள் என்னென்ன எடுக்க வேண்டுமோ, அத்தனையும் உடனடியாக எடுப்பதற்கான அறிவுரைகள் தரப்பட்டிருக்கின்றன.

அது மட்டும் அல்லாமல், பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக, பெரும் வெள்ளம் வந்து, ரயில் போக்குவரத்தே கூட இன்றைக்குத் தடைபட்டிருப்பதாகச் செய்திகள் வந்திருப்பதன் காரணமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று நண்பகலுக்குள்ளாக, ஹெலிகாப்டர் விமானம் மூலமாக, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களுக்குச் சென்று பார்வையிட்டு, 2, 3 நாட்கள் அங்கேயிருந்து, அதிகாரிகளோடும், மற்றவர்களோடும் கலந்து, தக்க நடவடிக்கை எடுப்பதற்கு, நேரிடையாக செல்ல இருக்கிறார்கள்.

அவரோடு தலைமைச் செயலாளர் அவர்களும், உரிய மற்ற அதிகாரிகளும் அங்கு செல்ல இருக்கிறார்கள். அதற்கிடையில் கிடைத்திருக்கிற தகவல்களின் அடிப்படையில், நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், எடுக்கப்பட்டு வருகிற நடவடிக்கைகளையும், மற்ற விவரங்களையும் இங்கே சொல்வார்கள். அவ்

வப்போது எடுக்கின்ற நடவடிக்கைகளையும், இருக்கின்ற நிலைமைகளையும், கிடைக்கின்ற தகவல்களையும் அவைக்கு எந்த முறையிலே தெரிவிக்க வேண்டுமோ, அதைத் தெரிவிக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. என்றாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரிடையாக பார்வையிடுவதன் மூலமாக எடுக்க வேண்டிய நிவாரண நடவடிக்கைகளை எடுக்க ஆங்காங்கு சென்று அங்குள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதன் மூலமாக, அங்கே ஓரளவிற்கு நிவாரணப்பணிகள் மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்ற விவரங்கள் அரசுக்கு கிடைக்க அரசு அதை அவைக்கு தர முயற்சி எடுக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : உதவிக்கு படகுகள் போய்ச் சேர வில்லை என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று கண்டதற்குப் பிறகு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, வெள்ள விபத்தைப் பற்றி நாவலர் அவர்கள் தெரிவித்துவிட்டதால் நான் அதைப்பற்றிப் பேசாமல் சென்னையில் அரசினர் கலைக் கல்லூரியில் பயில்கின்ற மாணவர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு எடுத்துக் சொள்ளலாம்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருவள்ளுவர் விரைவுப் பேருந்து தொழுதூர் அருகே விபத்துக்குள்ளானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், இரா. கருப்பையா, மு. அப்பாதுரை, தி. கா. நல்லப்பன் ஆகியோர் '' அண்மையில் சென்னைக்கு வந்துகொண்டிருந்த திருவள்ளுவர் விரைவுப் பேருந்தும் ஒரு லாரியும் தொழுதூர் அருகே மோதி டிரைவர் உட்பட மூவர் இறந்துள்ளதாலும், அறுவர் அபாய நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளதாலும், பலர் படுகாயமடைந்திருப்பதாலும், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.